# ❖❖ 64. காலிங்கராயன் அணைப் பட்டயம் ❖❖

இப்பட்டயத்தின் முற்பகுதி எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்கள் தொகுப்பிலும், பிற்பகுதி தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையிலும் உள்ளன.

மேல்கரைப் பூந்துறை நாட்டு வெள்ளோடு கிராமம் கனகபுரம் நஞ்சையன் மகன் லிங்கையன் பவானியாற்றில் கூடுதுறை அருகே அணைகட்ட இடம் பார்த்தபோது வெள்ளை வேட்டுவர் அந்த இடம் தன்னுடையது என்று எதிர்த்தான். வேளாளக் கவுண்டர்கள் பலர்கூடி எடுத்துச் சொல்லியும் வெள்ளை வேட்டுவர் கேட்கவில்லை.

காலிங்கராயனை ஆனைமலைக்கு அனுப்பி வைத்துவிட்டு எண்ணமங்கலம் காளியண்ணன் மதுரைப் பாண்டிய மன்னனிடம் சென்று படைபெற்றுவந்து கவுண்டர்கள் ஆலோசனையின்படி வெள்ளை வேட்டுவரை எண்ணமங்கலம் காளியண்ணன் வென்றார். காளியண்ணன் சாதிப்பட்டயம் கேட்டபோது பொங்கலூர் நாட்டுத் தெய்வசிகாமணி தனக்கே பட்டயம் சேரவேண்டும் என்று போட்டியாகக் கேட்டான்.

ஈரோடு கொங்கிலம்மன் கோயிலில் சீட்டுக் கேட்டதில் எண்ணமங்கலம் காளி யண்ணன் பெயருக்குச் சீட்டு வருகிறது. எண்ணமங்கலக் காளியண்ணன் காலிங்கராயனின் பிரதிநிதியாக இருந்துள்ளார்.

எண்ணமங்கலம் காளியண்ணனுக்குச் சாதிப்பட்டயம் கொடுத்து எந்தெந்தச் சாதியார் எவ்வளவு வரி கொடுக்க வேண்டும் என்று விரிவாகக் கூறப்படுகிறது. குயவன், குறவன், வலையன், மறவன், பறையன், சக்கிலி ஆகியோருக்கு வரி இல்லை என்ற விவரமும் கூறப்படுகிறது. இவ்வரிகள் காலிங்கராயன் பணிகட்கு உதவியிருக்கவேண்டும்.

காலிங்கராயன் பணிகட்கு, எண்ணமங்கலம் காளியண்ணன் உதவி செய்துள்ளார். வேட்டுவரை வெல்வதிலும், அணைகட்டிக் கால்வாய் வெட்டுவதிலும் காளியண்ணன் முன்னின்றிருக்கலாம். பட்டயத்தில் செய்திகள் விளக்கமாக இல்லை. இடையில் சில பகுதிகள் விடுபட்டிருக்கவேண்டும்.

## மூலம்

*ஸ்ரீமது சுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் பாசைக்கி தப்புவராத கண்டன் ஆரியதள விபாடன் ஆரியமோகந் தவிழ்த்தான் துலுக்கர்தள விபாடன் துலுக்கர்மோகந் தவிழ்த்தான் தொட்டியதள விபாடன் தொட்டியமோகந் தவிழ்த்தான் ஒட்டியதள விபாடன் ஒட்டியமோகந் தவிழ்த்தான் பலநாவுக் குறைவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாத*